Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.318/2021

**Depositions of PW- 4**

| Name | திரு.பால்ராஜ் | Occupation | கூலி வேலை |
|---|---|---|---|
| Father's name | செங்கணன் | Calling | |
| Village | மீனாட்சிபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of June 2026.

02.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 20.04.2021 அன்று மதியம் 12.00 மணியளவில் நானும் காளீஸ்வரனும் வேலை விசயமாக ராமச்சந்திராபுரத்திற்கு சென்றுகொண்டிருந்தோம். அங்கு கிருஷ்ணன்கோவில் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் படம் வரைந்து கொண்டிருந்தார். பின்னர் எழுதி எங்களிடம் கையெழுத்து பெற்றார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார்என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் அருகிலுள்ள வீட்டின் விவரம் எழுதப்பட்டிருந்தது. நான் வரைபடத்தில் கையெழுத்து செய்தேனா அல்லது எழுதிய தாளில் கையெழுத்து செய்தேனா என்றால் எழுதிய தாளில் கையெழுத்து செய்தேன். நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும் போலீசார் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜரில் காவல்நிலையத்தில்

வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.318/2021

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.காளீஸ்வரன் | Occupation | கூலி வேலை |
| Father's name | காமாட்சி | Calling | |
| Village | ரெங்கப்பநாயக்கன்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of June 2026.

02.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா.4 ஐ எனக்கு தெரியும். கடந்த 20.04.2021 அன்று மதியம் 12.00 மணியளவில் நானும் அசா.4 ம் வேலை விசயமாக சாலியர் தெரு அருகே சென்றுகொண்டிருந்தபோது கிருஷ்ணன்கோவில் சார்பு ஆய்வாளர் விசாரித்துக்கொண்டிருந்தார் எங்களிடமும் விசாரித்தார். பின்னர் அந்த இடத்தில் வைத்து வரைபடம் வரைந்து ஒரு பேப்பரில் எழுதி எங்களிடம் கையெழுத்து பெற்றார். என்னிடம் காட்டப்படும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் மேற்படி இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் ஒரு வீட்டில்வேலை செய்வதற்காக கூப்பிட்டிருந்தார்கள் அதற்காக அங்கு சென்றோம். பொதுவாக வேலைக்கு செல்பவர்கள் காலை 09.00 மணிக்கே சென்றுவிடுவார்கள் என்றால் சரிதான். எங்களுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் வேலை செய்யும் வீட்டிற்கும் சம்பவயிடத்திற்கும் 200 மீட்டர் தொலைவு இருக்கும். மேற்படி வரைபடம் தயார் செய்தபோது 2 காவலர்கள் அங்கு இருந்தார்கள். நான்

சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும் போலீசார் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.